# வானம் பார்த்த பூமி... வளமாக்கிய சூரியசக்தி...

## 25.04.2014

இன்று கை நிறைய சம்பளம் வாங்கிக் கொண்டு, வசதி வாய்ப்புகளுடன் நகர்ப்புறங்களில் வசித்து வரும் அனேகரின் மனங்களிலும்... 'ஏதாவது ஒரு கிராமத்தில் கொஞ்சமேனும் நிலம் வாங்கி விவசாயம் செய்து ஓய்வு நாளைக் கழிக்க வேண்டும். என்கிற ஆசைக்கனவு இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதிலும், சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் பிறந்து வளர்ந்து பணி நிமித்தமாக பெரு நகரங்களில் நாட்களை நகர்த்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த ஆசை சற்று கூடுதலாகவே இருக்கும். அந்த வகையில், குவைத் நாட்டில் பொறியாளராக வேலை செய்துவரும், திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் அருகில் உள்ள நாகமநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த டாக்டர்.எஸ்.கே.இளங்கோவன்... வறட்சி தாண்டவமாடும் வானம் பார்த்த பூமியை வளமான பூமியாக மாற்றி, தனது விவசாயக் கனவை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். சோலார், சொட்டுநீர் போன்ற நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார் இளங்கோவன். எங்களது பரம்பரை விவசாயக் குடும்பம். மானாவாரி நிலங்கள்தான் இங்கு அதிகம். ஆடு, மாடுகளை நம்பித்தான் பிழைப்பு. இளசுகள் விசைத்தறி, வட்டிக்கடை என்று வேறு தொழில் பார்க்கக் கிளம்பிட்டாங்க. என்னைப் போல் சிலர், படித்து வெளியூர், வெளிநாடு என்று செட்டிலாகிவிட்டோம். நான் கோயம்பத்தூரில் எம்.இ.படித்துவிட்டு, சில வருடம் லெக்சரராக வேலை பார்த்தேன். இப்போது, 19 வருடமாக, குவைத் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பொறியாளராக வேலை பார்த்திட்டிருக்கிறேன். என்னதான் காரு, பங்களா என்று வசதி வாய்ப்போடு வாழ்ந்தாலும்.. மனதில் விவசாயம் செய்ய வேண்டும் என்கிற ஆசை மட்டும் போகவேயில்லை. விடுமுறையில் ஊருக்கு வரும்போதெல்லாம் காரை எடுத்துட்டு நிலம் தேடுவேன். ஒரு வழியாக எங்க ஊரில் ஐந்து ஏக்கர் மானாவாரி நிலம் கிடைத்தது.

கொடீசியா கொடுத்த கொடை !

நிலத்தை வாங்கி, போர்வெல் போட்டப்போது, 630 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைத்தது. வேலி போட்டு மரப்பயிர்களை சாகுபடி செய்யத்தான் திட்டம் போட்டேன். ஆனால், கரன்ட் கனெக்ஷன் கிடைக்க தாமதமானதால், டீசல் மோட்டார் அமைக்க, ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். 'அது கட்டுபடியாகாது என்று நிறைய பேர் சொன்னாங்க. அதில் குழம்பிப் போய் இருந்த சமயத்தில்தான், 2012ம் வருடம், ரொம்ப வருடமாக சந்திக்க முடியாமல் இருந்த பழைய நண்பர் ஒருவருடன் போனில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. பேச்சுக்கு இடையில் நிலம் வாங்கின விஷயம் எல்லாவற்றையும் சொன்னேன். அவர்தான் ' கவலையேயில்லை. அதற்கு ஒரு அருமையான தீர்வு இருக்கு. உடனே புறப்பட்டு, கொடீசியாவில் நடக்கும் விவசாயக் கண்காட்சிக்கு வாங்க என்று கூப்பிட்டார். உடனே கிளம்பி வந்துட்டேன். அங்கு போனதும் 'பசுமை விகடன்' புத்தகத்தை வாங்கி, அதில் வெளியாகியிருந்த சோலார் பவர் சம்பந்தமான கட்டுரையைப் படிக்கச் சொன்னார். கரன்ட் கிடைக்காத ஒரு விவசாயி சோலார் பவரை பயன்படுத்தி பம்ப்செட்டை இயக்கி, தோட்டப் பயிர்களுக்கு பாசனம் செய்து வருவதைப் பற்றி அதில் எழுதியிருந்தாங்க. சோலார்தான் என் பிரச்னைக்கான தீர்வு என்று மனதிற்கு பட்டது. அடுத்த நாளே

சம்பந்தப்பட்ட விவசாயி தோட்டத்திற்குப் போய் சந்தேகங்களைக் கேட்டு தெளிவாகிட்டு உடனடியாக என் தோட்டத்திலும் சோலார் பேனல்களை அமைத்து, 5 ஹெச்.பி. மோட்டாரை போட்டு, பாசனத்தை ஆரம்பித்துவிட்டேன் என்றார்.

ஆரம்பத்தில் மட்டும் செலவு.. ஆயுளுக்கும் உண்டு வரவு!

நான், 10 கிலோ வாட் திறன் கொண்ட சோலார் பேனல்களை அமைத்திருக்கிறேன். இதன் மூலமாக 10 ஹெச்.பி. மோட்டார் வரை இயக்கலாம். போர்வெல் ஆழம், 630 அடி, இதிலிருந்து தண்ணீரை எடுத்து பாய்ச்சினால், சொட்டு நீர்க் குழாய்களுக்கு அழுத்தம் பத்ததாது. அதனால், போர்வெல்லுக்குப் பக்கத்தில் 20 அடி விட்டம், 5 அடி ஆழத்திற்கு ஒரு கிணறு மாதிரி தோண்டி சிமெண்ட் பூசி வைத்திருக்கிறேன். இதில், 55 ஆயிரம் லிட்டர் தண்ணீரை நிரப்பலாம். 5 ஹெச்.பி. மோனோபிளாக் பம்ப்செட் மூலமாக சொட்டு நீர்க் கருவிகளுக்கு இணைப்பு கொடுத்து பாசனம் செய்கிறேன். ஏக்கருக்கு 110 மரங்கள் என்ற கணக்கில் மலைவேம்பு கன்றுகளை நட்டிருக்கிறேன். முறையாக பராமரித்தால், ஏழு வருடத்தில், ஒரு மரம் 7 ஆயிரம் ரூபாய்க்கு போகும் என்று சொல்றாங்க என்றார்.

ஒரு கிலோ வாட் சோலார் பேனலுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஆகும். 10 கிலோ வாட்டுக்கு 12 லட்சம் ரூபாய் செலவானது. அரசு மானியம் வேற இதற்கு இருக்கு. ஆனால், அதற்காக அலைய நேரமில்லாததால், சொந்தச் செலவிலேயே அமைத்திட்டேன். இதை பகலில் மட்டும்தான் இயக்க முடியும். காலையில் எட்டரை மணியிலிருந்து சாயங்காலம் நான்கரை மணி வரை தொடர்ந்து இயக்குவதால், தடையில்லாமல் பாசனம் செய்ய முடிகிறது. மிதமான வெப்பம் உள்ள காலங்களில் செயல்பாடு குறையும். கரன்ட் பிரச்னைக்கு சூரிய ஒளி மின்சாரம் ஒரு நல்ல தீர்வு. ஆனால், அதோட விலை, சாதாரண விவசாயிகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு இருக்கு. வங்கிக்கடன், மானியம் எல்லாம் சரிவர கொடுத்து விவசாயிகளை ஊக்குவித்தால், ரொம்ப உதவியாக இருக்கும் என்றார்.

குறிப்பு : இது அயல்நாட்டு எண் என்பதால், இவருடைய எண்ணிற்கு 'மிஸ்டு கால்' கொடுத்தால் நேரம் கிடைக்கும் போது, அவரே திரும்பத் தொடர்பு கொள்வார்.

**தொடர்புக்கு,**

எஸ்.கே.இளங்கோவன்,

செல்போன் : 00965992 39369

மின்னஞ்சல் : skilangovan01@gmail.com

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 25.04.2014 www.vikatan.com**